1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் (''நிறுவனம்'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் விடுபட்டுள்ளனவா எனது என்பதற்கான அபிப்பிராயத்தை நியாயமான உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் கணக்காய்வுடன் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS) 3 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம், குறிப்பிடத்தக்க முந்தைய கால வழுக்கள், அவை கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் வெளியீடு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிதி கூற்றுக்களின் முதலாவது தொகுப்பில் ஒப்பீட்டுத் தொகைகளை மீண்டும் குறிப்பிடுவதன் மூலம் அல்லது குறித்த வழுவானது சமர்ப்பிக்கப்பட்ட முந்தைய காலத்திற்கு முன்னர் ஏற்பட்டிருந்தால் அதன் ஆரம்ப மீதிகளை மீண்டும் குறிப்பிடுவதன் மூலம் சரி செய்யப்படல் வேண்டும். SLPSAS 3 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் தேவையான	நாங்கள் உடன்படுகின்றோம். , முகாமையானது இந்தத் தொகையினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் சரிபார்த்து யூன் மாதத்தில் இதனை வருமானமாக எடுத்துக்கொண்டது.	நிதி கூற்றுக்களின் முதலாவது தொகுப்பில் முந்தைய கால வழுக்கள பின்னோக்கிய அடிப்படையில் சரி செய்யப்படல் வேண்டும்.

	வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டில் கணக்கீட்டு முறைமையில் தவறாகப் பதிவு செய்யப்பட்ட ரூபா.1,452,439 தொகையான செலுத்தவேண்டி VAT இனை மீளாய்வாண்டின் இறுதியில் கூட சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS) 7 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்) இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பயன்பாட்டிற்கு கிடைக்கக்கூடிய சொத்துக்கள், குறை வேலையிலிருந்து (WIP) பொருத்தமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (PPE) கணக்குகளுக்கு மாற்றப்படல் வேண்டும். எவ்வாறாயினும் , நிறைவு செய்யப்பட்ட செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா.8,976,462, PPE களுக்கு மாற்றப்படாமல் WIP ஆகவே காணப்பட்டன. மேலும், அத்தகைய சொத்துக்களுடன் தொடர்புடைய ரூபா.2,236,250 தொகையான தேய்மானம் நிதி கூற்றுக்களில் தாக்கல் செய்யப்படவில்லை.	நாங்கள் உடன்படுகின்றோம், எதிர்காலத்தில் இதனை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	நிறைவு செய்யப்பட்ட வேலை PPE இற்கு மாற்றப்படல் வேண்டும் மற்றும் தேய்மானம் உடனடியாக தாக்கல் செய்யப்படல் வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS) 7 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்) இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் , மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாயமான பெறுமதியானது அதன் முன் கொண்டு செல்லும் தொகையிலிருந்து கணிசமாக வேறுபடும் போது, மற்றுமொரு மீள்மதிப்பீடொன்று அவசியமாகும். எவ்வாறாயினும் , நிறுவனத்தால் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வரும் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட நான்கு வாகனங்களை மீள் மதிப்பீடு செய்து அதற்கேற்ப கணக்குகளில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நாங்கள் உடன்படுகின்றோம், சொத்து மீள்மதிப்பீட்டினை நிதியாண்டு 2025 இல் மேற்கொள்ளுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட வாகனங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வ விடயம்	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
சுற்றுலா காவல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா.3,192,000 தொகையான வாடகை வருமானம் 2014 ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்படாமல் உள்ளது மற்றும் இது தொடர்பாக எந்தவிதமான சேதமிழப்பிற்கும் ஏற்பாடு	2013 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான AMC இன் அடிப்படையில், சுற்றுலா காவல்துறையினரால் பயன்படுத்தப்படும்	வருமானம் உடனடியாக சேகரிக்கப்படல் வேண்டும் மற்றும் சேத இழப்பிற்கு ஏற்பாடு

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கட்டிடத்தின் இட அளவின் அடிப்படையில் வருமதியான வாடகைக்கான ஒதுக்கீடு கணக்கிடப்பட்டுள்ளது. நிறுவகத்துடன் சுற்றுலா காவல்துறையினருக்கு எவ்விதமான ஒப்பந்தமும் இல்லாமையினால் பணம் செலுத்துவதற்கு அவர்கள் இணங்கியிருக்கவில்லை. எனினும், இது கம்பனியின் உள்ளக முகாமைத்துவத்திற்கிடையே கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளது.	செய்யப்படல் வேண்டும்.

1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது ஏடுகள்

	விடயம்	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்	தொடர்புடைய ஏட்டின் பிரகாரம்	வேறுபாடு	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
		ரூபா.	ரூபா.	ரூபா.		
(அ)	சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் இருந்தான வருமதிகள்	383,613,503	370,233,945	13,379,558	2024 ஆம் நிதியாண்டிற்கு பொருத்தமான வருமதியான சுற்றுலா அபிவிருத்தி தீர்வை / விமானப் போக்குவரத்து தீர்வை என்பன மாத்திரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்கு மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.	மீதிகள் அவ்வப்போது இணக்கம் செய்யப்படல் வேண்டும் மற்றும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தில் இருந்தான வருமதிகள்	4,577,950	41,300	4,536,650	இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தில் இருந்தான எமது மொத்த வியாபார வருமதிகள் ரூபா.4,577,950 ஆகும்.	

1.5.4 தொங்கல் கணக்குகள்

விடயம்	தொகை ரூபா.	தொங்கலுக்கான காலப்பகுதி	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
விண்ணப்ப கட்டணங்கள்	4,056,194	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் பாடநெறிக்கான விண்ணப்பதாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கான கட்டணங்கள் அந்தந்த கணக்கீட்டு காலப்பகுதிகளில் வருமானமாக அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை மற்றும் இனங்காணப்படாத வைப்பு கணக்கொன்றில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	நாங்கள் உடன்படுகின்றோம், அந்த மீதிகளை அடையாளம் காண்பதற்கு வங்கி மற்றும் அந்தந்த திணைக்களத் தலைவர்களுடன் முகாமையானது பல தடவைகள் கலந்துரையாடலை மேற்கொண்டது மற்றும் இன்றைய நிலவரத்தின் பிரகாரம், முகாமையினால் இந்த மீதியினை ரூபா.3,000,000 தொகை வரை குறைப்பதற்கு முடிந்துள்ளது.	வருமானம் உடனடியாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

விடயம்	தொகை ரூபா.	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
குறை வேலை	1,317,600	ஒப்பந்தக் கோவைகள், உடன்படிக்கைகள் மற்றும் நிறைவுற்றமைக்கான அறிக்கைகள்.	இது சரி செய்யப்பட்டுள்ளது. 2025 மே மாதத்தில் துஏ இல் தேர்ச்சி பெற்றுள்ளது.	நிறுவகத்தினால் முறையான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவைகள்

1.6.1 செலுத்த வேண்டியவைகள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
பதிவேட்டின் பிரகாரம் கொழும்பில் உள்ள அட்டுறு செலவுகள் ரூபா.39,907,438 ஆகும். இருப்பினும், தொடர்புடைய அட்டவணை ரூபா.40,601,075 மீதியொன்றினை பிரதிபலித்தது, இதன் விளைவாக ரூபா.693,637 வேறுபாடொன்று காணப்படுகின்றது.	நாங்கள் உடன்படுகின்றோம், இந்த வேறுபாடு அடையாளம் காணப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது.	மீதிகள் அவ்வப்போது சரிசெய்யப்படல் வேண்டும் மற்றும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
01/2021 ஆம் இலக்க 2021 நவம்பர் 16 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை			
(i) செயற்பாட்டு கையேட்டின் 3.4 ஆம் இலக்க பந்தி	குறித்த திகதியில் உள்ளவாறு நிறுவனம் அதன் சொந்த தொடர்ச்சிக்கான திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.	கருத்துகள் தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை.	தொடர்ச்சிக்கான திட்டமொன்று தயாரித்திருக்கப்படல் வேண்டும்.
(ii) கூட்டமைப்பு ஆளுகை மீதான வழிகாட்டுதல்களின் 2.3 ஆம் பந்தி	இந்த தந்திரோபாய திட்டம் ஐந்து வருட காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டு பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும், வணிகச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப இந்தத் திட்டம் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்னதாக பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், நிறுவனத்திற்கான தந்திரோபாய திட்டமொன்று 2020–2023 வரையிலான நான்கு வருட காலப்பகுதிக்காக தயாரிக்கப் பட்டிருந்ததுடன் இன்று வரையிலும் புதுப்பிக்கப்படவில்லை.	கருத்துகள் தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை.	நிறுவனத்திற்கான தந்திரோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, உரிய காலப்பகுதியில் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.8 காசு முகாமைத்துவம்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
முந்தைய ஆண்டிலிருந்து முன் கொண்டு செல்லப்பட்ட ரூபா.585,139 பெறுமதியான இனங்காணப்படாத கடனட்டை வைப்புத்தொகைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் தேதி வரையிலும் இணக்கம் செய்யப்பட்டிரக்கவில்லை.	நாங்கள் உடன்படுகின்றோம், இந்த மீதிகளை அடையாளம் கண்டு நீக்கம் செய்வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.	அந்தந்த கணக்கீட்டு காலப்பகுதிகளில் வருமானத்தினை அங்கீகரிப்பதடன் இனங்காணப்படாத மீதிகளையும் இணக்கம் செய்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா.462,289,004 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா.405,202,482 ஆக காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா.57,086,522 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. சுற்றுலா அபிவிருத்தி தீர்வை வருமானம் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	நிறுவகத்தினால் முகாமை செய்யப்படும் ஹோட்டல் ஒன்று (சமுத்ரா ஹோட்டல்) 5 ஆண்டுகளாக புதுப்பித்தல் செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் அறைகளுக்காக வசூலிக்கப்படும் கட்டணம் 10 ஆண்டுகளாக திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.	சமுத்ரா ஹோட்டல் 2023 ஆம் ஆண்டில் சிறிய பராமரிப்பு மற்றும் பெரிய அளவிலான புதுப்பித்தலுக்கு உட்பட்டது மற்றும் 2024 ஆம் ஆண்டுக்காக முழுமையான புதுப்பித்தலொன்று திட்டமிடப்பட்டது. புதுப்பித்தல் செயற்பாட்டினை புகழ்பெற்ற ஹோட்டல் சங்கிலிகளுக்கு சபையானது அயலாக்கம் (அவுட்சோர்ஸ்) செய்ததனால் 2024 ஒக்தோபர் முதல 2025 ஏப்ரல் வரையிலும் அறைகளை மூட வேண்டிய கட்டாயமொன்று ஏற்பட்டது. அத்தியாவசியமான பராமரிப்பு, புதுப்பித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தியும் மற்றும் அதிகரித்து வரும் கேள்வி என்பவற்றின் காரணமாக ஏற்கனவே உள்ள வசதிகளுடன் கூடிய அறைகளை மீண்டும் திறப்பதற்கு சபை அனுமதியினை கோரியுள்ளது.	செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

		வணிக மற்றும் சந்தைப்படுத்தல் திட்டத்தினை உருவாக்குவதற்கு ஒரு குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது மற்றும் அவசரமான பராமரிப்பு செயற்பாடு 2025 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் நிறைவு செய்யப்பட்டது.	
(ஆ)	சமுத்ரா ஹோட்டலில் உள்ள உணவகமானது அதன் விற்பனை வருமானத்தினை அதிகரிப்பதற்கு தேவையான தந்திரோபாய சந்தைப்படுத்தல் முறைகளைப் பயன்படுத்தியிருக்காமையினால் உணவகம் குறித்த நுகர்வோர் விழிப்புணர்வு மிகக் குறைவாகவே காணப்பட்டது	சமுத்ராவின் சேவைகளை மேம்படுதல் செய்வதற்காக அரச நிறுவனங்களைச் சென்றடைதல், பதாகைகளுடன் கூடிய நேரடியான விளம்பரங்கள், திட்டமிடப்பட்ட தெருப் பிரச்சாரம் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கான வணிக மேம்பாட்டுக்கான வருகைகள் ஆகியவை உள்ளடங்கலாக பல்வேறு முயற்சிகளைத் சந்தைப்படுத்தல் பிரிவு ஆரம்பித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, நிகழ்நிலை (ஆன்லைன்) ஊடான இருப்பை பலப்படுத்துவதற்கு இலத்திரனியல் சந்தப்படுத்தலுக்கான பங்காளரை நியமனம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் புலக்காட்சியினை அதிகரிப்பதுடன், வாடிக்கையாளர்களை ஈர்த்தல் மற்றும் சமுத்ராவை உணவு மற்றும் நிகழ்வுகளுக்கான விருப்பமான இடமாக நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.	விற்பனை வருமானத்தினை அதிகரிப்பதற்காக தந்திரோபாய சந்தைப்படுத்தல் முறைகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
சமுத்ரா ஹோட்டல் நிறுவப்பட்டு 15 வருடங்களுக்கும் மேலான ஆண்டுளை கடந்திருந்த போதிலும் வாடிக்கையாளர் கட்டளைகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் தொடர்புடைய சேவைகளை வழங்குதல் தொடர்பான தகவல்களை அதனுடன் தொடர்புபட்ட திணைக்களங்கள் அறிந்திருப்பதை உறுதி செய்வதற்கு புதுப்பிக்கப்பட்ட கணினிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.	சமுத்ரா ஹோட்டலுக்கான POS முறைமையின் தேவைப்பாடு அடையாளம் காணப்பட்டு 2024 பாதீட்டில் உள்வாங்கப்பட்டுள்ளது. இருப்பினும், நியதிச்சட்ட வருமான பற்றாக்குறையின் காரணமாக, ஏனைய முக்கியமான செயல்பாட்டுத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக இந்த பாதீட்டின் உருப்படி ஒத்திவைக்க வேண்டியிருந்தது. இந்தத் தேவைப்பாடானது 2025 ஆம் நிதியாண்டுக்கான பாதீட்டில் உள்வாங்கப்பட்டுள்ளது.	புதுப்பிக்கப்பட்ட கணினிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்று நிறுவப்படல் வேண்டும்.

3.3 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
அரச பெறுகை வழிகாட்டியின் 5.4.8 இன் பிரகாரம், ஒப்பந்ததாரர் ஒப்பந்த உடன்படிக்கையினை மீறினால், பெறுகையின் நேர்மை தன்மையினை பாதுகாப்பதற்கு மதிப்பிடப்பட்ட ஒப்பந்தத் தொகையில் 5 சதவீதத்திற்குக் குறையாத செயல்திறன் பாதுகாப்பு பிணை முறியானது வேலைக்கு அவசியமாகின்றது. இருப்பினும், சமுத்ரா ஹோட்டலில் உள்ள உணவகத்தைப் புதுப்பிப்பதற்கான பெறுகை தொடர்பான அனைத்து ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் செயல்திறன் பாதுகாப்பு பிணை முறியானது பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஒப்பந்த பெறுமதி இரண்டு மில்லியனைத் தாண்டியுள்ள போதிலும், ஒப்பந்தத்தில் ஒப்பமிடும் நேரத்தில் செயல்திறன் பிணை முறியானதுபத்திரம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், ஒப்பந்ததாரர் வேலையை வெற்றிகரமாகவும் நிறுவகத்தின் தேவைப்பாடுகளுக்கு முழுமையாக இணங்கும் வகையில் நிறைவு செய்துள்ளார். புதிய பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம், ஐந்து மில்லியன் மற்றும் அதற்கு அதிக பெறுமதியான ஒப்பந்தங்களுக்கான செயல்திறன் பிணை முறியினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செயல்திறன் பாதுகாப்பு பிணை முறியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்தவம்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	குறைந்தபட்ச கல்வித் தகைமைகள் மற்றும் ஐந்து ஆண்டுகள் சேவைக் காலத்தினை கொண்ட உள்ளக ரீதியான ஊழியர்களை முகாமைத்துவ உதவியாளராக (ஆயு 1-2) பதவி உயர்வினை பெற்றுக் கொள்ளுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம், அனுமதிக்கின்றது. இந்த வெற்றிடங்களுக்கு உள்ளக ரீதியான விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும், அதே நேரத்தில் தகுதியான உள் விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் மாத்திரம் வெளிவாரியான விண்ணப்பதாரர்களை கருத்தில் கொள்ளல் வேண்டும். இருப்பினும், தகுதியான உள்ளக ரீதியான ஊழியர்களைக் கருத்தில் கொள்ளாமல் ஆறு முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடங்கள் வெளிவாரியான தரப்பினரால் நிரப்பப்பட்டன.	பிரதமர் அலுவலகத்தின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்ற ஆட்சேர்ப்பு மீளாய்வின் பிரகாரம், முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) பதவிகள் உள்ளடங்கலான 27 எண்ணிக்கையான உடனடியான வெற்றிடங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. நிறுவகத்தின் தந்திரோபாய இலக்குகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களை ஆதரிக்கும் வகையிலான பாட ரீதியான அறிவு, கணினி திறன்கள் மற்றும் மொழி ரீதியான புலமை கொண்ட தகைமைபெற்ற நபர்களை ஈர்க்கும் நோக்கத்துடனான நேர்முகப்பரீட்சை, பொதுவான விளம்பரம் மற்றும் பொதுவானதொரு பரீட்சை என்பவற்றினை இந்த செயன்முறை உள்ளடக்கியுள்ளது.	ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படல் வேண்டும்.

(ஆ)	2018 ஆம் ஆண்டு முதல் சலவை தொழிற்பாடுகளுக்கான உத்தியோகத்தர் பதவிக்கு நிரந்தர நியமனம் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மாத சம்பளமான ரூபா.77,655 இனை விட அதிகமான கொடுப்பனவு அடிப்படையில் தனிநபரொருவர் பணியமர்த்தப்பட்டிருந்தார். மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த கொடுப்பனவுகள் ரூபா.3,302,400 ஆகும். இதன் விளைவாக ரூபா.2,370,540 மிகையான கொடுப்பனவொன்று இடம்பெற்றிருந்தது.	நிறுவனம் பல்வேறு விளம்பரங்கள் செய்வதன் மூலம் சலவை தொழிற்பாடுகளுக்கான உத்தியோகத்தர் ஒரவரை நியமணம் செய்வதற்கு முயற்சித்துள்ளது ஆனால் தகுதிவாய்ந்த வேட்பாளர்களைக் கண்டுபிடிப்பதற்கு வழங்கப்படும் குறைந்த சம்பளம் சவாலானதாக மாற்றியுள்ளது. மாணவர்களின் நடைமுறை மற்றும் வருமான உழைப்பிற்கு பயன்படுத்தப்படும் சலவை அலகினை 50 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள வருகை தரு விரிவுரையாளர் திரு. ஏ. குமாரசாமி மேற்பார்வையிட்டு வருகின்றார் மற்றும் அவரது நியமனம் மற்றும் கொடுப்பனவுகள் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.	SOR இன் பிரகாரம் நிரந்தர உத்தியோகத்தராக சலவை உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படல் வேண்டும்.